# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 35/2024 நாள்.25.03.2026

DW1- திரு.மணிமாறன், த/பெ. திரு.பெரியசாமி

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்துக்கள் என்தாத்தாவுக்கு சொந்தமானதாக இருந்தது என்றால் ஆமாம். என் தகப்பனாரோ அவர் உடன் பிறந்தவர்களோ சொத்துக்கள் விலைக்கு வாங்கவில்லை என்றால் இல்லை. எனது தாத்தா அவர் காலத்தில் யாருக்காவது ஆவணம் மூலம் சொத்தை எழுதிவைத்துள்ளாரா என்றால் என் அப்பாவுக்கு எழுதி வைத்துள்ளார். என்ன ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் செட்டில்மெண்ட் பத்திரம். செட்டில்மெண்ட் பத்திர தேதி என்ன என்றால் சாட்சி பதில் எதுவும் சொல்லவில்லை. எந்த புல எண்ணிலுள்ள எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார் என்றால் ஞாபகமில்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா என் அப்பாவுக்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தார் என்ற விபரத்தை என்னுடைய எதிர் வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஆமாம். தாவாவை என்னை தவிர மற்ற பிரதிவாதிகள் யாரும் முன்நடத்தவில்லை என்றால் ஆமாம். வழக்கு அறிவிப்பை நான் பெற்றுகொண்டேன் என்றால் ஆமாம். அதற்கு பதில் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என் தாத்தா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதாமல் ஏதாவது இருந்ததா என்றால் இல்லை. என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என் அப்பாவுக்கு மட்டும் கிடைத்துவிட்டது என்று சொல்லுகிறேனா என்றால் ஆமாம். பட்டா என் அப்பா பெயருக்கு மாறியிருந்ததா என்றால் இருந்தது. தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா பெரியசாமி இறந்ததேதி என்ன என்றால் ஞாபகமில்லை. என் அப்பாஇறப்புக்கு முன்பாகவே என் தாயார் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு அவர் அப்பாவிடமிருந்து வந்த சொத்துக்களை அவரே அனுபவம் செய்தார் என்றால் ஆமாம். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் பதிவு செய்யபட்ட ஆவணங்கள் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என் பிரமாணவாக்குமூலத்தில் 3,4 பாராவில் திருமணம், சீர்வரிசை குறித்த விஷயங்களை என்னுடைய எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் 10பேராகிய எங்களுக்கு சொத்தை கொடுத்தாரா என்றால் இல்லை. என் தகப்பனார் இறந்தபிறகு 10பேரிடையே எழுத்து மூலமான பதிவு செய்யபட்ட

ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எந்தெந்த புலஎண்ணிற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அப்பா பெயரில் உள்ளது, சகோதரர்கள் பெயரில் உள்ளது சர்வே எண் பட்டா எண் தெரியாது. மேற்படி சகோதரர்கள் பெயரில் உள்ள பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து சம்மந்தமான விபரங்கள் கண்ட பத்தி 4 பிரமாண வாக்குமூலத்தின் சங்கதிகளை எதிருரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ஆம் வகுப்பு. என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள புல எண்கள், விஸ்தீரணங்கள் குறித்துள்ளேனே அது எதை பார்த்து எழுதினேன் என்றால் பட்டாவை பார்த்து எழுதினேன். அந்த சொத்துவிபரம் சம்மந்தபட்ட பட்டாக்கள் என்னிடம் உள்ளது என்றால் ஆமாம். எந்த தேதியில் தகப்பனார் இறந்தபிறகு பஞ்சாயத்து பேசபட்டது என்றால் ஞாபகமில்லை. பஞ்சாயத்து பேசபட்ட சமயத்தில் சரஸ்வதியும், ராமலிங்கமும் இருந்ததாக சொல்லும் விபரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிரல் சொல்லவில்லை என்றும் முதல்விசாரணையில்தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நஞ்சைநிலம், புஞ்சைநிலம், தென்னந்தோப்பு என் தாத்தாவிடமிருந்து கிடைத்தது என்றால் ஆமாம். நஞ்சைநிலம், புஞ்சைநிலம், தென்னந்தோப்பு எவ்வளவு ஏக்கர் என்றால் குத்துமதிப்பாகதான் தெரியும் சரியாக தெரியாது. சொத்து சம்மந்தமாக என் தகப்பனார் இறந்தபிறகு பஞ்சாயத்து பேசபட்டதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசபட்டதை அனுசரித்து எழுத்து மூலமாக ஆவணம் ஏற்பட்டதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் மூலமாக கிடைத்த சொத்துக்களில் எந்த சொத்துக்காவது வாதி பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. எனக்கும் என் சகோதரருக்கும் திருமணமான பிறகு அவரவர் குடும்பத்தில் நடைபெறும் வரவு செலவு குறித்து மற்றவருக்கு தெரியாது என்றால் ஆமாம். என் தகப்பனார் இறந்தபிறகு அவருக்கு பட்டானாரிடமிருந்து கிடைத்த சொத்துக்கள் எங்கள் 10பேரிடையே கூட்டு சுவாதீனத்தில் உள்ளது என்றால் இல்லை. என் தகப்பனார் இறந்த சமயத்தில் கடன் இருந்தது என்பதை என் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக பெற்றோரிடமிருந்து சொத்தை பெற்றுகொள்வதைபோல் அவருடைய மருத்துவ செலவுகளை ஏற்றுகொள்ளவேண்டும் என்றால் ஆமாம். என் தகப்பனாரின் மருத்துவசெலவுக்கு கடனாக 6லட்சம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேனே அதற்கு எழுத்து மூலமான ஆவணம் உள்ளதா என்றால் பணம்கட்டிய பில் உள்ளது. வாதிக்கு 1ஏக்கர் நிலம் கொடுக்கபட்டதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. அந்த 1ஏக்கர் என்பது எந்த புல எண்ணில் எந்த நான்கெல்லையில் உள்ளது என்றால் சாட்சி அதுபற்றி எதுவும் சொல்லவில்லை. வாதி குமணனிடம் கடன் பெற்றதாக சொல்வது உண்மையல்ல என்றால்

சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் கண்ட புல எண் சொத்துக்களில் தொடர்ந்து என்ன விவசாயம் செய்கிறோம் என்பதை காண்பிக்க அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா மூலமாக கிடைத்த சொத்துக்களுக்கு மற்ற பாகஸ்தர்களுக்கு ஒருசிலருக்கு பட்டா கிடைத்திருந்தாலும், அது மற்ற பாகஸ்தர்களை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. சொத்துக்கள் பிரிவினையில்லாமல் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதால் வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சவுகரியத்தை அனுசரித்து ஒருஒருவர் ஒருஒரு பகுதியை அனுபவித்து வருவது மற்றவர்களின் உரிமையை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. என் தகப்பனார் எந்தவிதமான ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதால் வாதி மற்றும் 9பிரதிவாதிகள் ஒருஒருவருக்கும் 1/10 பாகம் கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.25 16:21:43 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**